Verakesari 20/01/2016

# இரத்தினபுரி மாவட்ட தமிழ்க்கல்வி ஏற்றம் பெற ஏற்றவை ஆற்றப்பட வேண்டும்

ஒரு சமுதாயத்தின் எதிர்கால இருப்புக்கும் சிறப்புக்கும் வளத்திற்கும் அடிப்படையாயிருப்பது கல்வியே. அந்தக் கல்வியை உரிய காலத்தில் உரிய, உயரிய தரத்தில் பிள்ளைகளுக்குப் பெற்றுக்கொடுக்காவிட்டால் அல்லது பெற்றுக்கொடுக்க முடியாவிட்டால் அந்த சமூகம் பல்வேறு பின்னடைவுகளைச் சந்திப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் தமிழ்க்கல்வி, தமிழர் கல்வி நாட்டின் கல்வி நிலையை ஒப்பிடும் போது மிகவும் பின்தங்கியுள்ளது. காலத்திற்குக் காலம் இரத்தினபுரி மாவட்ட தமிழ்ப் பாடசாலைகள் தரமுயர்த்தப்படவுள்ளன; வளங்கள் வழங்கப்படவுள்ளன என்று பலதரப்பட்டவர்களும் அறிக்கைகள் விடுவதுடன் அடங்கிவிடுகின்றனர்.

நாட்டின் கல்விக் கொள்கையானது இலவசக் கல்வி, எல்லோருக்கும் சமத்துவமான உயர்ந்த உயரிய கல்வி, பதின்னான்கு வயது வரை கட்டாயக் கல்வி போன்ற பல பெறுமானங்களை உள்ளடக்கியதாகக் கூறப்படுகின்றது. நவீனயுகத்திற்கேற்றாற்போல் கணினி, தொழில்நுட்பக் கல்வி என்று பல்வேறு தரக்கல்வி நிலைபற்றிப் பேசப்படுகின்றது.

இரத்தினபுரி மாவட்ட தமிழ்ப்பாடசாலைகள் எதுவுமே நாட்டின் பொதுக்கல்விக் கொள்கைக்கு உள்வாங்கப்பட்டவையாகத் தெரியவில்லை. இரத்தினபுரி மாவட்டத்தில் மொத்தமாகத் தமிழ்ப்பாடசாலைகள், தொண்ணூற்றி ஐந்து இயங்குகின்றன. இப்பாடசாலைகள் நான்கு கல்வி வலயங்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஆரம்பப் பாடசாலைகள் ஐம்பத்தெட்டு, இடைநிலைப் பாடசாலைகள் இருபத்தெட்டும் உயர்தரப் பாடசாலைகள் ஒன்பதும் அடங்குகின்றன.

வலய ரீதியாக நோக்கும் போது பலாங்கொடை கல்வி வலயத்தில் இருபத்தொரு தமிழ்ப்பாடசாலை களும் எம்பிலிப்பிட்டிய கல்வி வலயத்தில் பதின்மூன்று தமிழ்ப்பாடசாலைகளும் இரத்தினபுரி கல்வி வலயத்தில் முப்பத்தியிரண்டு பாடசாலைகளும் நிவித்திகல கல்வி வலயத்தில் இருபத்தொன்பது தமிழ்ப்பாடசாலைகளும் இயங்குகின்றன. இருபத்தியிரண்டாயிரத்துக்கும் கிட்டிய எண்ணிக்கையான மாணவ, மாணவியர் அதாவது தமிழ்ப்பிள்ளைகள் இப்பாடசாலைகளில் கற்கின்றனர்.

பொதுவாகவே தமிழ்ப்பாடசாலைகளில் குறிப்பாக மலையகப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய ஆளணிப்பற்றாக்குறை இரத்தினபுரி மாவட்டத்திலும் காணப்படுகின்றது. குறிப்பாக கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் கட்டாய பாடங்களான கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்குரிய தகைமை கொண்ட ஆசிரியர்களின் கற்பித்தல் வழிகாட்டல் இன்றியே பல பாடசாலை மாணவ, மாணவியர் பரீட்சைக்குத் தோற்றும் கவலைக்குரிய நிலையும் கண்டறியப்பட்டுள்ளது. அழகியற் பாடங்களான சித்திரம், சங்கீதம், நடனம் உட்பட்ட பாடங்களுக்கும் உடற்கல்வி, வர்த்தகம் போன்ற பாடங்களுக்கு மட்டுமல்ல கட்டாய பாடங்களான வரலாறு, தமிழ், இந்துசமயம் போன்ற பாடங்களுக்குமான ஆசிரிய ஆளணிப் பற்றாக்குறையும் வெளிப்பட்டுள்ளது.

ஆரம்பப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் தேவையும் கவனத்தில் கொள்ளப்படாதுள்ளது. இவ்வாறுள்ள நிலையில் நாட்டின் தேசியக் கல்விக் கொள்கை இரத்தினபுரி மாவட்டத் தமிழ்ப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுவதாகவோ, உரிய, உயரிய கல்வி அம்மாவட்ட தமிழ்ப் பிள்ளைகளுக்கு வழங்கப்படுவதாகவோ எவ்வாறு ஏற்கமுடியும்?

இம்மாவட்டத்திலுள்ள கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தர வகுப்புகள் கொண்டவையாகத் தரப்படுத்தப்பட்டுள்ள ஒன்பது பாடசாலைகளில் எதிலுமே உயர்தரத்தில் கணிதப்பிரிவோ, விஞ்ஞானப்பிரிவோ இல்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. கலை மற்றும் வர்த்தகப் பிரிவுகளைக் கொண்ட பாடசாலைகளில் அதாவது 1 சீ தரப் பாடசாலைகளில் குறித்த பிரிவிற்குரிய பாடங்களைக் கற்பிக்கும் தகைமை கொண்ட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமலேயுள்ளன.

கலைப்பிரிவில் எத்தனையோ பாடங்கள் உள்ள போதும் தமிழ், அரசியல் மூலதத்துவங்கள், புவியியல் பாடங்களே அநேக பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்றன. சில பாடசாலைகளில் இந்து நாகரிகமும் கற்பிக்கப்படுகின்றது. கலைப்பிரிவுப் பாடங்களான அளவையியலும் விஞ்ஞானமும், வரலாறு, சித்திரம், கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், மனைப் பொருளியல் உள்ளிட்ட பாடங்களைத் தெரிவு செய்யும் உரிமை பொதுவாகவே கலைப்பிரிவில் உயர்தரம் கற்கும் இரத்தினபுரி மாவட்ட தமிழ்ப்பிள்ளைகளுக்கு மறுக்கப்பட்டுள்ளதென்று கூற முடிகின்றது.

பலாங்கொடை கல்வி வலயத்திலுள்ள உயர்தர வகுப்புகள் வரை கொண்ட இந்து மகா வித்தியாலயம், பின்னவல தமிழ் மகாவித்தியாலயம், சீ.சீ.தமிழ் மகா வித்தியாலயம், கனகநாயகம் தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய நான்கில் கனகநாயகம் தமிழ் மகா வித்தியாலயமும் எம்பிலிப்பிட்டிய கல்வி வலயத்தில் இறக்குவானை புனித ஜோன் தமிழ் மகாவித்தியாலயமும் ஆயிரம் பாடசாலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அதேபோல் இரத்தினபுரி கல்விவலயத்தின் கலைமகள் தமிழ் மகா வித்தியாலயம், இரத்தினபுரி தமிழ் மகாவித்தியாலயம், காவத்தை தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய மூன்றில் இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயமும் அதேபோல் நிவித்திகல டேல தமிழ் மகா வித்தியாலயமும் ஆயிரம்பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஒரு கல்வி வலயத்தில் ஒரு தமிழ்ப் பாடசாலை என்றபடி நான்கு கல்வி வலயங்களிலிருந்து நான்கு தமிழ்ப் பாடசாலைகள் அபிவிருத்திக்காகத் தெரிவாகி ஆண்டுகள் உருண்டோடுகின்றன. உருப்படியாக எதுவும் நடைபெற்றதாகப் பதிவுகள் எதுவுமே இல்லை. அறிக்கைகள், செய்திகள் மற்றும் ஆவணங்களுக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே இம்மாவட்ட தமிழ்ப்பாடசாலைகளின் அபிவிருத்திச் செயற்பாடுகளுள்ளன.

மலையகத்திலிருந்து வைத்தியர்களும் பொறியியலாளர்களும் உருவாக வேண்டுமென்று கூறப்படுவது வழக்கமாகிவிட்டது. மலையகத்தின் ஒரு அங்கமான இரத்தினபுரி மாவட்டத்தில் உயர்தர வகுப்புகளில் கற்கவோ, பரீட்சைக்குத் தோற்றவோ தமிழ் மாணவ, மாணவியருக்கு கணித, விஞ்ஞான பாடங்கள் கற்கவோ எதுவித வசதியும் இல்லாத போது, செய்து கொடுக்காதபோது தாதியாகக்கூடிய தகுதி கூட பெறமுடியாத நிலையுள்ளது.

கணித பாடத்தில் திறமைச்சித்தி பெறக்கூடியதான கணித பாடக் கற்பித்தல் இல்லாத நிலையில் எதுவித அரசாங்க சேவையிலும் இணைந்து கொள்ள முடியாத நிலையுமுள்ளது.

இருபதாயிரத்திற்கு மேற்பட்ட இரத்தினபுரி மாவட்ட பாடசாலைக் கல்வியைப் பெறும் தமிழ்ப்பிள்ளைகளின் கல்வியில் பொறுப்புடன் கவனம் செலுத்த வேண்டும். கல்வியானது உரிய காலத்தில் உரியபடி வழங்கப்படவேண்டிய ஒன்று. பிந்திப்போட முடியாதது. பார்ப்போம். ஆலோசிப்போம் என்று ஒத்திவைக்கக்கூடாது.

இரத்தினபுரி மாவட்ட தமிழ்க் கல்வி ஏற்றம் பெற ஏற்றவை ஆற்றப்படவேண்டும். அதுவும் உடன் செயற்படுத்தப்படவேண்டும்.

**த. மனோகரன்**
(கல்விக்குழுச் செயலாளர்,
அகில இலங்கை இந்து மாமன்றம்)